**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு T. சோழவேந்தன், B.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

*******

2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் 05 – ம் நாள் வெள்ளிக்கிழமை

******

**இடைமனு எண்.02/2023-ல் அசல் வழக்கு எண். 126/2017**

பக்கிரிசாமி ... மனுதாரர்/பிரதிவாதி

...எதிர்...

1. தில்ஷாத்பேகம்
2. அன்சர்பேகம் .... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 20.12.2023 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு S. சுந்தரய்யா அவர்களும், எதிர்மனுதார் தரப்பில் வழக்கறிஞர் திரு A. ராம்குமார் அவர்கள் ஆஜராகியும், அசல் வழக்கானது 5 வருடத்திற்கு மேல் நிலுவையில் இருந்து வருகிறது. எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்ய போதுமான வாய்ப்பு கொடுக்கப்பட்டிருந்தும் இன்று இறுதி வாய்ப்பு கொடுக்கப்பட்டும் எதிர்மனுதார் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யமையால் தோன்றா தரப்பினராக்கப்பட்டு வாதி தரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

அசல் வழக்கிற்கான கூடுதல் எதிர் வழக்குரையை காலத்தில் கொடுக்காத கால தாமதத்தை மன்னித்து அதை ஏற்றுக்கொள்ளும்படி உத்தரவிடக்கோரி மனுதாரர்/பிரதிவாதியால் இம்மனு உ.வி.மு. சட்டம் பிரிவு-151-ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. மனுவின் சுருக்கம்</u>**

(i) மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார். அசல் வழக்கில் மனுதாரர்/பிரதிவாதி மீது எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்குத் தொடர்ந்து விசாரணைக்கு வந்து வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்ய கெடுப்போடப்பட்டு உள்ளது. வழக்கில் பிரதிவாதிக்காக முன்பு வைத்திருந்த வழக்கறிஞர் மூலம் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். எதிர்வழக்குரையில் கூறவேண்டிய சில முக்கிய சங்கதிகளை சேர்க்க கூறியிருந்துள்ளார். ஆனால் பிரதிவாதி கூறிய சில முக்கிய சங்கதிகள் எதிர்வழக்குரையில் விடுபட்டு போய்விட்டது. பிரதிவாதியும் வழக்கறிஞரை நம்பி எதிர்வழக்குரையில் கூறப்பட்டுள்ள சங்கதிகளை சரியாக படிக்காமல் கையெழுத்து போட்டுவிட்டார். மேற்படி சங்கதி தற்போது வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட பிறகு தான் தெரியவந்தது. வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ அதை முன்பே பார்க்காமலிருக்கவில்லை.

(ii) விடுபட்டுபோன சங்கதிகளை கூடுதல் எதிர்வழக்குரையாக தாக்கல் செய்யவேண்டுமென்று பிரதிவாதிக்கு தற்போது சட்ட ஆலோசனை கிடைத்துள்ளது. கூடுதல் எதிர் வழக்குரையை காலத்தில் தாக்கல் செய்யாத காலதாமதத்தை மன்னித்து அதை ஏற்றுக்கொள்ள வேண்டியது நியாயமாக உள்ளது. இல்லாவிடில் பிரதிவாதிக்கு ஏராள நஷ்டமும், கஷ்டமும் ஏற்படக்கூடும். கூடுதல் எதர்வழக்குரையை தற்பொழுது ஏற்றுக்கொள்வதினால் வாதிகளுக்கு எவ்வித குந்தகமும் ஏற்படாது. எனவே அசல் வழக்கிற்கான கூடுதல் எதிர் வழக்குரையை காலத்தில் கொடுக்காத கால தாமதத்தை மன்னித்து அதை ஏற்றுக்கொள்ளும்படி உத்தரவிடக்கோரி மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

**<u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>**

2. மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

3. இம்மனுவில் மனுதாரர் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்ய போதுமான வாய்ப்பு கொடுக்கப்பட்டும் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாமையால் தோன்றா தரப்பினராக்கப்பட்டுள்ளார்.

**<u>4.தீர்வு</u>** (i) மனுதாரர்/பிரதிவாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, வாதிகள் தரப்பில் முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில் பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் எதிர் வழக்குரை தாக்கல் செய்ய அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா என பரிசீலிக்கையில் ஏற்கனவே பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையை அனுசரித்துதான் கூடுதல் எதிர் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது. ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரைக்கு விரோதமான பொருண்மைகள் கூடுதல் வழக்குரையில் சொல்லப்படவில்லை என்பதால் பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் வழக்குரையை ஏற்றுக்கொள்வதினால் எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்படுவதில்லை. வழக்கின் தன்மையும் மாறுவதில்லை.

(iii) மேலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்து அதன் பின் வழக்கில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது என்றும், மனுவின் தன்மை கருதி தரப்பினர்கள் அவரவர் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

முடிவில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் 05-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்/- T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**பின் இணைப்பு**

| | |
|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி | - இல்லை - |
| மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் | - இல்லை - |
| எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள் | - இல்லை - |
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் | - இல்லை - |

(ஒம்/- T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

இடைமனு எண்.2/2023-ல்
அசல் வழக்கு எண்.126/2017
நாள்.05.01.2024